Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages 

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 JULY 2023

Click - 04 Re. 1

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களே!

உங்களுக்கு மாதம் தோறும் அனுப்பப்படும் நியூஸ் பேப்பர் மற்றும் கடிதங்கள் வரவில்லை என்றால் நமது சங்கத்தின் பிஆர்ஓ ரவிக்குமார் ( 9841272071 ) அவர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். அல்லது உங்கள் பகுதிச் செயலாளரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு : DM. **பிரேம்குமார்**, CVPA செயலாளர்

# 26 வது CVPA பொதுக்குழுவின் ஒப்புதலுக்காக அனுப்ப இருக்கும் முக்கிய தீர்மானங்கள்!

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்!

நமது சங்க உறுப்பினர்கள், இச்சங்கத்தின் முன்னேற்றத்திற்காகவும், சங்கவளர்ச்சிக்காகவும், சங்க நிர்வாகிகளிடம் அவ்வப்போது வழங்கி வரும் ஆலோசனைகளும், கருத்துகளும் வரவேற்கும் படியாகவே இருந்து வந்தது . இவை அனைத்தும் கடந்த மாதம் (13.06.2023) எஸ்வினஸ் கிளப்பில் நடைபெற்ற செயற்குழு முன்பு எடுத்து வைக்கப்பட்டது. இவை செயற்குழுவின் ஒப்புதலுடன் பொதுக்குழுவிற்கு தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நமது சங்க விதிகளின்படி எந்த ஒரு முக்கிய தீர்மானமும் பொதுக்குழு கூடி பெரும்பான்மையான சங்க உறுப்பினர்களின் ஆதரவுடன் மட்டுமே அவை தீர்மானமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற நியதி உள்ளது. அதன் அடிப்படையில் தற்போது இந்த நிர்வாகம் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு செய்ய உள்ள நிலையில், உங்கள் ஆலோசனைகளும், வரவேற்கக் கூடிய கருத்துக்களும் பொதுக்குழுவில் தீர்மானமாக நிறைவேறும் நிலைக்கு வர உள்ளன. வரும் ஆகஸ்ட் மாதம் சென்னையில் நமது சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தை முறையாக கூட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்ய தொடங்கியுள்ளோம்.

இதன் தொடக்கமாக வரும் ஆகஸ்ட் மாதம் பொதுக்குழுவைக் கூட்ட செயற்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்குழுவில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள், பொதுக்குழுவின் முன் பரிசீலனைக்கு கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானங்கள் பொதுக்குழு உறுப்பினர்களாகிய உங்கள் பேராதரவோடு தீர்மானமாக நிறைவேற்றப்படும் போது, நமது சங்க உறுப்பினர்கள் பயன் பெரும் வண்ணம் பல்வேறு நலத்திட்டங்கள் உருவாக காரணமாக அமையும் என்று முழுமையாக நம்புகின்றோம்.

நடைபெற உள்ள நமது பொதுக்குழுவின் முன்பாக ஒப்புதலுக்காக வைக்கப்பட உள்ள முக்கிய தீர்மானங்களின் விபரங்கள்.

★ நமது தொழில் சார்ந்த மூலப் பொருட்களின் விலை ஏற்றத்தால், பெரும் அளவில் நமது சங்க உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் . இதை கருத்தில் கொண்டு நாம் ஏற்கனவே சங்க உறுப்பினர்களுக்கு ஒரு புதிய விலைப்பட்டியலை அறிமுகம் செய்து வைத்துள்ளோம். இதை நடைமுறைப்படுத்தும் விதமாக சென்னை நகரின் எல்லா பகுதியிலும் உள்ள போட்டோ வீடியோ ஸ்டூடியோக்களிலும் விலை ஏற்றம் செய்யப்பட்டு வருகிறது என்கிற விவரத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது தொடர்பாக இறுதி முடிவு எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பொதுக்குழுவின் முடிவை ஏற்று பத்திரிகை விளம்பரம் வெளியிடுவது தொடர்பாக ஒப்புதல் பெறுவது.

★ மாற்றுத்திறனாளிகளுக்கு சந்தா கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை வழங்கும் தீர்மானத்திற்கு ஒப்புதல் பெறுவது தொடர்பாக.

★ சங்கத்தில் உள்ள மகளிர் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கு சந்தா தொகையில் 30 சதவீதம் சலுகை அளித்து ஒப்புதல் பெறுவது தொடர்பாக.

★ சங்கத்தில் புதியதாக இணையும் உறுப்பினர் கட்டணம் 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக மாற்றி அமைக்கவும், இவர்களின் ரெனிவல் கட்டணத்தை 750 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக உயர்த்துவதுடன், புதிய ஆயுட்கால உறுப்பினர் சந்தா தொகை 6000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தி வாங்கும் முறையை செயல்படுத்துவது தொடர்பாக பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு விட தீர்மானித்துள்ளோம். மேலும் மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஆயுட்கால உறுப்பினர், புதிய உறுப்பினர், ரெனிவல் சந்தா தொகையை 25% உயர்த்துவது தொடர்பாக பொதுக்குழுவின் பரிசீலனைக்கு விடப்படுகிறது.

★ உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் சந்தா தொகையில் 50 சதவீத தொகையை புதியவங்கி கணக்கு தொடங்கி இதில் சேமித்து வைத்து அல்லது டெபாசிட் செய்து வைத்து, இதில் இருந்து சங்க உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி மற்றும் ஈமச்சடங்கு தொகை வழங்குவது தொடர்பான தீர்மானத்தை பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு விடுவது தொடர்பாக

★ சிறு மருத்துவ உதவி பெற தகுதி உள்ளவர்கள், அவர்கள் தொடர்ந்து செய்யும் ரெனிவல் அடிப்படையில்தான் அமைய உள்ளது. அதாவது மூன்று வருடம் தொடர்ந்து ரினிவல் செய்தவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாமல் வீட்டுக்குள்ளேயே இருக்கும் பட்சத்தில் முதல் மாதத்தில் 5,000 ரூபாய் மருத்துவ உதவித்தொகை இவர்களுக்கு கிடைக்கும், அடுத்த இரண்டாம் மாதமும் அவருடைய மருத்துவ ஓய்வு தொடரும் பட்சத்தில் மீண்டும் 5,000 ரூபாய் வழங்கப்படும் . இதுவே சங்க உறுப்பினர்கள் தொடர்ந்து ஐந்து வருடம் ரினிவல் செய்திருந்து தொழில் செய்ய முடியாமல் மருத்துவ ஓய்வில் இருக்கும் பட்சத்தில் முதல் மாதம் 10,000 ரூபாயும், இரண்டாம் மாதமும் மருத்துவ ஓய்வு தொடரும் பட்சத்தில் மீண்டும் 10,000 ரூபாய் மருத்துவ உதவியாக இவர்களுக்கு கிடைக்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து முடிவெடுக்க பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு விடுவது தொடர்பாக.

★ நமது சங்கத்தின் அதிகாரப்பூர்வ இதழான CVPA NEWS-ஐ பிரிண்ட் மீடியாவில் வெளிவருவதை தவிர்த்து விட்டு PDF பதிவாக மட்டுமே இனி சங்க உறுப்பினர்களின் மொபைல் போன் வாட்ஸ் அப்பில் மட்டும் வெளியிடுவது தொடர்பாக.

★ புதிய உறுப்பினர்களுக்கு வயது வரம்பு 21 வயதில் தொடங்கி 45 வயது வரை நிர்ணயிப்பது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றுதல் தொடர்பாக.

★ தொடர்ந்து சங்கத்தில் ரெனிவல் செய்து வரும் உறுப்பினர்களைத் தவிர, தேர்தல் நடத்துவதற்கு ஒரு வருடம் முன்பாகவே புதிய உறுப்பினர் சேர்த்தல் நிறுத்தப்படும். குறிப்பாக அந்த காலகட்டத்தில் மூன்று வருடம் கழித்தோ, அல்லது ஐந்து வருடம் கழித்து விட்டுப் போன ரெனிவல் செய்ய வரும் பட்சத்தில் சங்க உறுப்பினர்களின் அப்போதைய வயது வரம்பு அடிப்படையில்தான் சங்க உறுப்பினராக அவர் தொடர்வது குறித்தும் அல்லது நீடிப்பது குறித்தும் சங்க நிர்வாகிகள் முடிவு எடுப்பது தொடர்பாக.

★ நமது சங்கத்தில் இருந்து வெளியேறி, ஒரு புதிய போட்டி சங்கம் தொடங்கி, அந்த சங்கத்தில் நமது சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் எந்த ஒரு பொறுப்பில் இருந்தாலும் , அவர்களை சங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு , எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சங்கத்தில் இருந்து நீக்கும் அதிகாரத்தை பொதுக்குழுவில் கொண்டு வருவது தொடர்பாக.

★ தற்போது நமது சங்கத்தில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை சங்க தேர்தல் நடைபெற்று வருகிறது. இது இனி வரும் காலங்களில் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை சங்க தேர்தல் தேர்தல் நடத்துவது என மாற்றி அமைத்து புதிய தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பாக.

சங்க உறுப்பினர்களாகிய நீங்கள் எங்களுக்கு வழங்கிய ஆலோசனையின்படிதான் அனைத்து தீர்மானங்களும் இந்த பொதுக்குழுவில் கொண்டு வரப்படுகின்றன. இனி பொதுக்குழு உறுப்பினர்களாகிய உங்கள் பேராதரவுடன் தான் இந்த தீர்மானங்கள் புதிய திட்டங்களாக செயல்பாட்டிற்கு வரப் போகின்றன . எனவே புதிய தீர்மானங்களை ஆதரித்து வெற்றி பெற செய்ய வேண்டுமென உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

**செல். செல்வம்** CVPA தலைவர்

**DM.பிரேம்குமார்** CVPA செயலாளர்

# விபத்து காப்பீட்டில் எது பெஸ்ட்?

நமது சங்க உறுப்பினர்களுக்கு தற்போது 3 லட்ச ரூபாய் வரை மட்டுமே, விபத்து காப்பீடாக செய்யப்படுகிறது. இது விபத்து காலங்களில் ஏற்படும் மருத்துவ செலவுகளுக்கு பொருந்துவதில்லை. எனவே தற்போது மூன்று விதமான விபத்து காப்பீடு பாலிசியை சங்க உறுப்பினர்கள் முன்பு வைக்கப்படுகிறது. சங்க உறுப்பினர்களின் ஆலோசனையின்படி இந்த மூன்று திட்டங்களில் ஒரு திட்டம் இறுதி செய்யப்பட உள்ளது.

★ விபத்தில் உயிர் இழக்க நேரிட்டால் அந்த குடும்பத்திற்கு 3 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். அதேசமயம், உயிரிழப்பின்றி விபத்திற்காக மருத்துவ செலவு மட்டுமே செய்ய நேரிட்டால் இதற்காக 2 லட்ச ரூபாய் இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து பெற முடியும். இதற்கான பிரிமியம் தொகை 757 ரூபாய் ஆகும்.

★ விபத்தில் உயிர் இழக்க நேரிட்டால் அந்த குடும்பத்திற்கு 3 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். அதேசமயம், உயிரிழப்பின்றி விபத்திற்காக மருத்துவ செலவு மட்டுமே செய்ய நேரிட்டால் இதற்காக 1 லட்ச ரூபாய் இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து பெற முடியும். இதற்கான பிரிமியம் தொகை 433 ரூபாய் ஆகும்.

★ விபத்தில் உயிர் இழக்க நேரிட்டால் அந்த குடும்பத்திற்கு 6 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். அதேசமயம், உயிரிழப்பின்றி விபத்திற்காக மருத்துவ செலவு மட்டுமே செய்ய நேரிட்டால் இதற்காக 50,000 ரூபாய் இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து பெற முடியும். இதற்கான பிரிமியம் தொகை 439 ரூபாய் ஆகும்.

விபத்து ஏற்பட்டு சிகிச்சை பெறும் போது மருத்துவமனை சார்பில் வழங்கும் சிகிச்சைகள் குறித்து இன்சூரன்ஸ் நிறுவனம் தரும் விபரக்குறிப்பு :

a) மருத்துவமனை/முதியோர் இல்லத்தால் வழங்கப்படும் அறை, போர்டிங் செலவுகள்

b) நர்சிங் செலவுகள்

c) அறுவை சிகிச்சை நிபுணர், மயக்க மருந்து நிபுணர், மருத்துவப் பயிற்சியாளர், ஆலோசகரின் சிறப்புக் கட்டணம்.

மயக்க மருந்து, இரத்தம், ஆக்ஸிஜன், ஆபரேஷன் தியேட்டர் கட்டணங்கள், அறுவை சிகிச்சை உபகரணங்கள், மருந்துகள் மற்றும் நோய் கண்டறிதல் பொருட்கள், எக்ஸ்ரே, செயற்கை உறுப்புகள் மற்றும் உறுப்புகளின் செலவு மற்றும் அதுபோன்ற செலவுகள்

காயமடைந்தவர்களை விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனை/முதியோர் இல்லத்துக்கு அழைத்துச் செல்வதற்கும், வீடு வரை வெளியேற்றப்படும்போதும் ஆம்புலன்ஸ் கட்டணம்.

# சோனி எஃப் எக்ஸ் 30 கேமரா ஒரு பார்வை




19 மாத இடைவெளியில் அடுத்தடுத்து வெளியான சோனியின் எஃப் எக்ஸ் 3 மற்றும் எஃப் எக்ஸ் 30 சினி லைன் மிரர்லஸ் கேமராக்கள்தான் தற்போது வீடியோகிராபர்கள் மத்தியில் பேசும் விஷயமாக மாறியுள்ளது. இவ்விரண்டு கேமராக்களும் ஒன்று போலவே இருந்தாலும் இரண்டு மாடல்களுக்கும் இடையே நிறையவே வேறுபாடு உள்ளது. இதில் எஃப் எக்ஸ் 3 கேமரா 2021 பிப்ரவரி சந்தையில் அறிமுகமானது. சோனி எஃப் எக்ஸ் 30 கேமராவை பொறுத்தவரை 2022 செப்டம்பரில் சந்தைக்கு வந்தது. சோனி எஃப் எக்ஸ் 3 கேமராவைவிட சோனி எஃப் எக்ஸ் 30 கேமரா விலை மிகவும் குறைவானது. எனவேதான் இலகுரக மற்றும் இலகுவான அதே சமயம் இயக்குவதற்கு எளிதானதாக வடிவமைக்கப்பட்டது என்றுதான் எஃப் எக்ஸ் 30 கேமராவை வீடியோகிராபர்கள் விரும்பி வாங்கி வருகிறார்கள்.

சோனி எஃப் எக்ஸ் 30 கேமராவானது சூப்பர் 35 எம்.எம் சினி லைன் கேமராவாகவே பார்க்கப்படுகிறது. இது புதியதாக மேம்படுத்தப்பட்ட பிஎஸ்ஐ எக்ஸ்மோர்-ஆர் APSC டைப்-சி சீமோஸ் கிராப் சென்சாருடன் வடிவமைக்கப்பட்டது. சென்சாரின் அளவு 23.3×15.5 ஆகும். போட்டோ வீடியோ இவை இரண்டையும் நல்ல தரத்துடன் எடுக்கும் தன்மை கொண்டது என்பதால் வீடியோகிராபர்களின் கவனம் இந்த கேமரா மீது திரும்பியுள்ளது. போட்டோ எடுக்க 26 மெகா பிக்சல்களும், வீடியோ எடுக்க 20.1 மெகாபிக்சல்களும் தரமான காட்சி அமைப்புகளுக்கு சிறந்த கேமராவாக இது உள்ளது. சோனி கேமரா என்று சொன்னாலே அதன் ஆட்டோ போக்கஸ் சிஸ்டம் என்பது ரியல் டைம் ட்ராக்கிங், ஃபேஸ் டிடெக்ஷன்-ஐ ஆட்டோ ஃபோகஸ் என தனித்துவம் வாய்ந்தது என்று அனைவரும் அறிவார்கள். இது எஃப் எக்ஸ் 30 கேமராவிலும் தொடர்கிறது. சோனியின் மீண்டும் ஒரு தனித்துவமான டூயல் பேஸ் ஐஎஸ்ஓ 800-2500 வரை என பல்வேறு ஒளிச் சூழ்நிலையில் உயர்தர படங்களை எடுக்க ஏதுவானது. இந்த கேமராவில் பயன்படுத்தியுள்ள பயாக்ஸ் எக்ஸ்- ஆர் ஹை லெவல் பவர் ப்ராசஸிங் உள்ள காரணத்தால் சினிமா காட்சிகளுக்கு இணையான தரத்தை கொடுக்கும் படியாக இந்த கேமரா உள்ளது. இதன் சென்சிட்டிவிட்டி100-32000 என இருந்தாலும் இதை மேலும் விரிவு படுத்திக் கொள்ள முடியும். தொழில்துறையில் முன்னணியில் உள்ள இமேஜ் சென்சாரை கொண்டுள்ளதால் சிறந்த படத்த தரத்திற்கு 4கேவை வினாடிக்கு 120 பிரேம்கள் வரை ஷூட் செய்து கொள்ள முடியும். 6கேவை ஓவர் சாம்பலின் செய்யும்போது சூப்பர் 35 தெளிவுத் திறனுடன் 4கேவை 60 பிரேம்கள் வரை ஷூட் செய்து கொள்ள முடிகிறது. சிறந்த கலர் கிரேடிங் முறைக்கு 10பிட்டில் 4:2:2 இன்டர்னலாக ரெக்கார்டிங் செய்யவும், இது தவிர 16கே ரெசுலேசனில் 16 பிட் ராவில் எக்ஸ்டர்னலாக ரெக்கார்டிங் செய்து கொள்ளும்படியும் உள்ளது. இது ஒரு சினி லைன் கேமராவாக இருப்பதால் கலர் கிரேடியேஷனுக்கு ஏற்ற எஸ்-லாக்3, எஸ்- சினி டோன், எச்எல்ஜீ, போகஸ் மேப்பிங் போன்ற பார்மெட்டுகள் எஃப் எக்ஸ் 30 கேமராவிற்கு கூடுதல் பலம் சேர்த்து வருகின்றன.

## BSI சென்சார்

பொதுவாக தலைமுறை மாற்றம் ஏற்படும் போது நமது பயன்பாட்டில் உள்ள டிஜிட்டல் கேமராக்களிலும் அதன் தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்டு மாறி வருவதை நாம் கண்கூடாக பார்த்து வருகிறோம். நேற்று இருந்த தொழில்நுட்பம் இன்று இல்லை. இன்று இருக்கும் தொழில்நுட்பம் நாளை இருக்கப் போவதில்லை என்பதே இது நமக்கு உணர்த்துகிறது. 2009 ஆம் ஆண்டில் சோனி நிறுவனம் முதன்முதலாக எக்ஸ் மோர்- ஆர் சீமோஸ் சென்சார் எனும் பின்பக்கம் ஒளியூட்ட பட்ட சென்சாரை அறிமுகப்படுத்தியதுடன் படத்தின் தரத்தை அதன் மூலமாக மேம்படுத்தி காட்டியது. இதன் பிறகுதான் ஏனைய கேமரா தயாரிப்பு நிறுவனங்கள் இது குறித்து ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அதே போன்றதொரு சென்சாரையும் வடிவமைத்து கொண்டார்கள். இதனால் பிஎஸ்ஐ எனும் பின்பக்கம் ஒளி ரூட்டப்பட்ட சென்சார் தொழில்நுட்பம் இப்போது அனைத்து முன்னணி பிராண்டுகளும் ஏற்றுக்கொண்ட ஒரு தொழில் நுட்பமாக மாறியது. இது கேமராவோடு நின்று விடாமல் இன்று ஸ்மார்ட் போன், டேப்லெட்டுகள் மற்றும் மொபைல் சாதனங்களிலும் காணப்படுகிறது.

பேக் இலுமினேட்டட் சென்சார் என்பது டிஜிட்டல் கேமராக்களுக்கான இமேஜ் சென்சார் ஆகும். இது ஏனைய சென்சார்களிலிருந்து வேறுபட்ட அமைப்பைக் கொண்டுள்ளது. இது பிக்சல் அளவில் அதிக ஒளியை சேகரிக்க அனுமதிக்கிறது. இதன் விளைவாக வரும் படங்கள் குறைவான டிஜிட்டல் சப்தத்தை கொண்டிருக்கின்றன.


ஒவ்வொரு சென்சாரும் தனிப்பட்ட படகூறுகள் அல்லது பிக்சல்களானது. அவை மேட்ரிக்ஸ் வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிக்சல்களுக்கும் முன்னால் ஒரு லென்ஸ், பின்புறத்தில் சென்சார்கள் மற்றும் நடுவில் எங்காவது கம்பிகள் உள்ளன. ஏற்கனவே இருந்து வந்த சென்சார்களில் டிரான்சிஸ்டர்கள் கொண்ட ஒரு அணி லென்ஸ்கள் முன் வைக்கப் படுகிறது. எனவே ஒளியானது லென்ஸை தாக்கும் முன் கம்பிகள் மற்றும் டிரான்ஸ் சிஸ்டர்கள் பிரேமை வழியாக பயணிக்க வேண்டும். மேலும் அந்த ஒளியில் சில தடுக்கப்படுகிறது. பின்புற ஒளியூட்ட பட்ட சென்சாரில் டிரான்ஸ்சிஸ்டர் மேட்ரிக்ஸ் லென்ஸ்களுக்கு பின்னால் நகர்த்தப்படுகிறது. இது ஒவ்வொரு பிக்சலும் அதிக ஒளியை தாக்க அனுமதிக்கிறது. சிக்னல் டு இரைச்சல் விகிதத்தைப் பொறுத்தவரை அவை 8 டிபி மேம்பாட்டை வழங்குவதாக கூறப்படுகிறது.

# STACKED CMOS IMAGE SENSOR

**புலிவலம் ரவி** (திருச்சி) 9442777240

கேமரா நிறுவனங்கள் தங்களது புதிய கேமராக்களை வெளியிடும்போது ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வார்கள்.மேலும் ஏற்கனவே கேமராவில் இருக்கின்ற தொழில் நுட்பங்களையும் மேம்படுத்திக் கொண்டே இருப்பார்கள். அந்த வகையில் கேமராவில் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு தொழில்நுட்பமாக இமேஜ் சென்சார் இருக்கிறது.

ஆரம்ப நாட்களில் கேமராக்களில் CCD இமேஜ் சென்சார் பயன்பாட்டில் இருந்து வந்தது .அதன் பிறகு அதை மேம்படுத்தும் வகையில் வேறொரு புதிய CMOS தொழில்நுட்பம் வந்தது.அது இன்று வரை பயன்பாட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது. அதன் பிறகு CMOS சென்சாரை மேம்படுத்தும் வகையில் BSI சென்சாரை பற்றி தான் இந்த கட்டுரை.





பொதுவாக CMOS சென்சார் என்பது ஒரு அடுக்கை (Layer) கொண்டதாகும். அதே போல இரண்டு அடுக்கு (Layer) ட்ரான்சிஸ்டர் பிக்சல் என்பதே Stacked CMOS Sensor என்று அழைக்கப்படுகிறது இதை Dual Light Sensitive சென்சார் என்று வேறு பெயரிலும் கூறலாம்.

இதற்கு முன் வெளிவந்த BSI சென்சாரை-ஐ விட அதிக திறனை வெளிப்படுத்தும் விதமாக பிக்சல் ட்ரான்சிஸ்டர்கள், சிப்புகள், போட்டோ டயோடுகள் மற்றும் பல விதமான இன்டர்னல் சர்க்யூட்டுகளை மேம்படுத்தி உருவாக்கப்பட்டு இருக்கிறது. இது கிட்டத்தட்ட ஒளியின் அளவை இரட்டிப் பாக்குகிறது. குறைந்த ஒளியில் மற்றும் இரவு நேர ஒளியில் எடுக்கப்பட்ட படங்களின் நாய்ஸையும் (Noice) குறைகிறது. படங்களின் டைனமிக் ரேஞ்சுகளையும் (Dynamic Range) அதிகப்படுத்துகிறது. பேக்ரவுண்டில் அதிக வெளிச்சம் மற்றும் குறைவான வெளிச்சம் இருக்கும்போது எடுக்கப்படும் படங்களை அண்டர் எக்ஸ்போசர் மற்றும் ஓவர் எக்ஸ்போசர் ஆகாமல் அதை குறைக்கிறது.

மேலும் கேமராவிலுள்ள CMOS சென்சாரில் நேரடியாக RAM உருவாக்கப்பட்டுள்ளது. எனவே மிகப்பெரிய அளவிலான டேட்டாக்களையும் (Data) விரைவாக மெமரி கார்டிற்கு அனுப்பும். மேலும் அதை விரைவாக Read செய்யவும் முடிகிறது. ஸ்போர்ட்ஸ் போட்டோகிராபிக்கென வெளிவந்த DSLR கேமராக்களில் உள்ள தொழில்நுட்பங்களை விட, தற்போது வெளி வருகின்ற மிரர்லஸ் கேமராவில் ப்ரோ ஸ்போர்ட்ஸ் போட்டோகிராபிக்கும், வன உயிரியல் ஒளிப்பட கலைக்கும் மற்றும் வீடியோ படப் பதிவின் போது மேம்படுத்தப்பட்ட Stacked CMOS சென்சார் ஆனது விரைவாக டேட்டாக்களை சேமிக்கவும், வாசிக்கவும் ,மேலும் கையாளவும் பயனுள்ளதாக இருக்கிறது.


முந்தைய BSI சென்சாரின் உயர்ந்த தரம் அப்படியே இருக்கிறது. ஆனால் வேகம் மட்டும் கூடுதலாக இருக்கிறது. இந்த வேகம் கேமராவின் மற்ற ஒவ்வொரு தொழில்நுட்பங்களின் செயல் திறன்களையும் அதிகரிக்கிறது. முக்கியமாக இந்த இமேஜ் சென்சார் கேமராவின் மையப் பகுதியில் இருப்பதால் ஆட்டோ போகஸ் மற்றும் லைவ் வியூ பட அமைப்புகளையும் மேம்படுத்துகிறது.



முக்கியமாக ப்ரோ ஸ்போர்ட்ஸ் கேமராக்களுக்கு சிறந்த பங்களிப்பை வழங்குகிறது.

Stacked CMOS சென்சாரின் இந்த வேகம் ஒரு வினாடிக்கு அதிக எண்ணிக்கையில் படங்களை எடுக்க ஏதுவாகிறது. உதாரணமாக நிகான் இஸட் 9 கேமராவில் இந்த Stacked CMOS சென்சார் பயன்பாட்டில் உள்ளது. ஒரு வினாடிக்கு 120 படங்கள் வரை ஒகஉஎ பார்மட்டிலும், ஒரு வினாடிக்கு 20 படங்கள் வரை RAW பார்மெட்டிலும் படம் எடுக்க முடிகிறது. அதாவது ஆட்டோ போகஸ் மற்றும் ஆட்டோ எக்ஸ்போசரையும் ஒரு வினாடிக்கு 120 முறை ரீ-சைக்கிளுக்கு இந்த சென்சார் முக்கிய காரணமாகிறது. மேலும் கேமராவின் இன்டர்னல் பதிவாக Pro&Res 422 HQ 10 Bit (MOV) &À 4K UHD (3840×2160) and 8K UHD (7680×4320) தரத்தில் வீடியோ ( Apple Video Codec) எடுக்க முடிகிறது.

இந்த Stacked CMOS சென்சார் மூலம் முழு அளவிலான எலக்ட்ரானிக் சட்டர்களின் செயல் திறன்களையும் மேம்படுத்த முடிகிறது. முந்தைய எலக்ட்ரானிக் சட்டர்கள் மூலம் பிளாசை (Flash) ஒளிரச் செய்ய முடியாது. ஆனால் தற்போதுள்ள இந்த Stacked CMOS சென்சாரால் முழுமையான எலக்ட்ரானிக் செட்டர்களின் மூலம் பிளாஸை ஒளிர செய்ய முடியும். மேலும் பரந்த அளவிலான செயற்கை ஒளியிலும் படமெடுக்க முடியும்.




Cross-section photo of CMOS image sensor with 2-Layer Transistor Pixel technology

கேமராக்களில் முன்புள்ள கேமராக்களில் முன்புள்ள தொழில் நுட்பமான ஃபிளிக்கர் (Flicker) தொடர்பான லைட்டிங் வேறுபாடுகளையும் மற்றும் வேகங்களையும் இது முற்றிலும் களைகிறது.

நண்பர்களே இந்த Stacked CMOS சென்சார் தற்போது விலை உயர்ந்த பல முன்னணி கேமராக்களில் (சோனி ஆல்ஃபா 1,கேனான் ஆர் 3,, நிகான் z9, z8) பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தொழில்நுட்பம் காலப்போக்கில் அடுத்தடுத்து வரும் அனைத்து கேமராக்களிலும் ( நாம் வாங்கும் விலையில்) விரைவில் வரும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை.

நன்றி !

அட்மின் தமிழ்நாடு கேமரா டெக்னிக்கல் கிளப்

## வருந்துகிறோம்



மயிலாப்பூர் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **பெ.துரை இளங்கோ** (வயது 36) அவர்கள் உடல்நிலை சரியில்லாத நிலையில் இம்மாதம் இயற்கை எய்தினார் அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் நமது சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்க நிர்வாகிகள் துரை இளங்கோவிற்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின் நமது சங்கம் சார்பாக சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரெனிவல் அடிப்படையில் ரூபாய் 10 ஆயிரத்தை அவரது குடும்ப வாரிசுதாரர்களிடம் வழங்கினார்கள்.

- CVPA



## நன்றி! நன்றி!! நன்றி!!!

எங்கள் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்த சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்,மாநில சங்க நிர்வாகிகள், முன்னாள் சென்னை மாவட்ட சங்க நிர்வாகிகள், நண்பர்கள், ஒளிப்பட கலைஞர்கள் மற்றும் தொலைபேசி வாயிலாகவும், முகநூல் வாயிலாகவும், வாட்ஸ்அப் வாயிலாகவும் வாழ்த்துக்களை தெரிவித்த அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
**செல். எஸ். செல்வம்**
CVPA தலைவர்



நமது சங்கத்தின் தண்டையார்பேட்டை பகுதி செயலாளர் திரு. பச்சையப்பன் - கவிதா இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகளுடன், சங்க செயற்குழு உறுப்பினர்களும், சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகளும் நேரில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.




சென்னை கே, கே . நகரில் அமைந்துள்ள முத்துக்குமரன் டிஜிட்டல் ஸ்டுடியோ திறப்பு விழாவில் மாநில சங்க தலைவர் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. மாநில சங்க பொறுப்பு பொதுச் செயலாளர் பொன்னுசாமி, மற்றும் மாநில சங்க பொருளாளர் சுரேஷ், மாநில சங்க துணை தலைவர் சரவணன், முன்னாள் மாநில இணைச் செயலாளர் பாலச்சந்தர், சென்னை மாவட்ட சங்க தலைவர் செல். செல்வம், சென்னை மாவட்ட சங்க செயலாளர் பிரேம்குமார், பொருளாளர் ஜெயபால், பீஆர்ஓ ரவிக்குமார், கே.கே. நகர் செயற்குழு உறுப்பினர் திருமலை, இவர்களுடன் முன்னாள் சென்னை மாவட்ட சங்க நிர்வாகிகள் விஜயகுமார் மற்றும் மனோகர் ஆகியோர் ஸ்டுடியோ திறப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.




நங்கநல்லூர் பகுதியின் நமது சங்க உறுப்பினர் ஜில்லாவேலு தம்பதியினரின் மகன் இஷாந்தின் முதலாவது பிறந்தநாள் வெகு சிறப்பாக கொண்டாடினார்கள். இந்நிகழ்ச்சியில் தென் சென்னை எஸ் 2 துணைத் தலைவர் ஜெயக்குமார் மற்றும் நங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.

## ஒளிப்படத் தொழிலில் கலக்க போகும் AI எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்




இனி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் எல்லாத் துறைகளிலும் ஏதோ ஒரு வகையில் தன்னை முதன்மை படுத்திக் கொண்டே இருக்கும். குறிப்பாக இனி வரும் காலங்களில் நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத வகையில் போட்டோகிராபி - வீடியோகிராபி தொழில்நுட்பத்தில் ஒரு புரட்சியை உருவாக்கும் என்று இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் நினைக்கின்றனர். அதே சமயம் இத்தொழில் நுட்பத்தால் நல்லதும் கெட்டதும் சேர்ந்தே நடக்கும் என்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என்பது கணினிகள் எந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவைகளுக்கு மென்பொருள் மூலமாக மனித மூளையை கொடுப்பது போன்றது. இதனால் அது சுயமாக சிந்திக்கவும் கற்றுக் கொள்ளவும் முடியும். மொத்தத்தில் நமக்கு கிடைக்கப் போகும் ரோபோ வடிவிலான ஒரு உதவியாளரைப்போல் அதனை கருதி கொள்ளுங்கள். ஏஐ-யை பற்றிய நம்ப முடியாத விஷயம் என்னவென்றால், அது காலப்போக்கில் தனது கற்றலை தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டே இருக்கும் என்பதுதான். இதனால் தனது செயல்பாடுகளை துல்லியமாக மாற்றிக் கொண்டே இருக்கும். எனவே எதிர்காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தொழில் நுட்பமாக இது மாறும் என்று கணிக்கப்படுகிறது.

ஒளிபபடத் தொழில் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கம் என்பது போட்டோ வீடியோ எடிட்டிங் முறையில் நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவிற்கு மாற்றங்கள் ஏற்படும். நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில் ஆட்டோ எடிட்டிங் முறை உருவாகுவதற்கு நிறையவே வாய்ப்புகள் உள்ளது. புகைப்படக் கலையில் ஆர்வமுள்ள எண்ணற்ற இளம் புகைப்பட கலைஞர்களை ஒரு தொழில் முறை கலைஞர்களுக்கு இணையாக சக்தியாக இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மாறலாம். முப்பரிமாண மாதிரிகளை உருவாக்குவதில் முன்னிலை வகிக்கலாம். எல்லாமே நாம் செயற்கை நுண்ணறிவை நம் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தும் விதத்தில் உள்ளது.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.07.2023

**To**